**தலைப்பு 161 – வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு.**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தலைப்பு 161 – வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூன் 27 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 50(ii) இன் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடு இயலுமானவரை முழுமையாகவும் சரியாகவும் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அமைச்சின் மீளாய்வு ஆண்டில் 23 செலவின விடயங்களில் ரூபா 79,600,000 ஆன மொத்த தேறிய நிதி செயற்பாட்டில் ரூபா 51,482,224 அதாவது 65 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்ததுடன் செலவின செலவின விடயங்களுக்கிடையே அந்த சேமிப்பின் சதவீதம் 53 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. | அரச செலவின முகாமைத்துவம் தொடர்பாக விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கையில் பிரகாரம் அத்தியாவசிய செலவினங்களுக்காக மாத்திரம் அதிகாரம் வழங்கியமை, அமைச்சு பதவியணியினரில் சாரதி சேவையின் உத்தியோகத்தர்கள் வெற்றிடமாக காணப்பட்டமை, அமைச்சு புதிய இடத்தில் ஸ்தாபித்தல் தாமதமடைந்தமை போன்றவற்றின் காரணமாக நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடு சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

**அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| i. நிதிப் பிரமாணம் 104(3), 104(4) | | வாகன விபத்து தொடர்பாக முழுமையான அறிக்கை சமர்ப்பிப்பதற்கு 07 நாட்களை விட மேலதிகமாக தாமதம் ஏற்படும் என எதிர்பார்க்கபடுமாயின் ஆரம்ப அறிக்கை ஒன்று உடனடியாக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்த போதிலும் விபத்து ஏற்பட்டு 114 நாட்களுக்கும் 204 நாட்களுக்கும் இடையிலான காலம் கடந்திருந்தது 03 வாகனங்களுக்காக ஆரம்ப அறிக்கைய அல்லது முழுமையான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கும் விபத்து ஏற்பட்டு 197 நாட்கள் மற்றும் 199 நாட்கள் கடந்திருந்த 02 வாகனங்களுக்கான முழுமையான அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | வாகன விபத்து தொடர்பாக நீதிப்பிரமானம் 104(3) மற்றும் 104(4) பரிசோதணைகள் நடாத்துவதற்காக ஆரம்ப நடவடிக்கை எடுக்கபடுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பரிசோதனை நடவடிக்கைகளை துரிதப்படுத்தி பூர்த்தி செய்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| ii. | நிதிப் பிரமாணம் 1642 | வாகனங்களை பயன்படுத்துகின்ற உத்தியோகத்தர்களால் அல்லது உத்தியோகத்தர்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் சாரதிகளினால் மேற்கொள்ளப்படுகின்ற சகல திடீர் விபத்துக்களும் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்க வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டில் இடம்பெற்ற 03 வாகன விபத்துக்கள் மற்றும் 2024 சனவரி மாதம் ஏற்பட்ட வாகன விபத்தொன்று தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக உரிய தரப்பினருக்கு எச்சரிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வாகன விபத்துக்கள் தொடர்பாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் விடயப்பரப்புக்குரிய நிறுவனத்தின் விடயங்கள், பணிகள் மற்றும் அதற்குரிய கொள்கை நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்ட வழங்கல், அமல்படுத்துதல். பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீடு அமைச்சின் முன்னுரிமை பணியாக இருந்த போதிலும் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற இரண்டு திணைக்களங்கள் மற்றும் நிதியத்தின் மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட ரூபா 23,094,700 ஆன 38 பணிகள் தொடர்பாக அமைச்சினால் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காணப்பட்ட பொருளாதார நெருக்கடிகளினால் பொருட்களின் விலை உயர்வடைந்து சென்றமையால் அமைச்சரவை மற்றும் பொது திறைசேரி வழங்கிய ஆலோசனையின் பிரகாரம் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் அதன் கீழுள்ள நியதிச்சட்ட நிதியங்களில் திட்டங்களை திருத்தி விடயப்பரப்பை வரையறுப்பதற்கு ஆலோசனை வழங்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் பணிகளை மேற்பார்வை செய்தல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உலக வங்கி (IBRD) கடன் மற்றும் சர்வதேச அபிவிருத்தி சங்கம் (IDA) கடன் மற்றும் நிதி ஏற்பாடு தொடர்பாக 2011 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட பெறுகைகள் வழிகாட்டு கோவையின் 3.7 பிரிவின் பிரகாரம் நேர் பெறுகை முறைமையை பின்பற்றுவதற்கும், உரிய வழங்குநரைத் தெரிவுசெய்வதற்கும் நியாயப்படுத்துவதற்காக போதியளவான உறுதிப்படுத்தல் உலக வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதும் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 793,534,305 ஆன. வன ஆய்வு நிறுவனத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்படாத நிரமானங்களுக்குரிய ஒப்பந்தத்திற்காக அவ்வாறான உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கபட்டமைக்கும் உலக வங்கியிலிருந்து நேரடியான பெறுகை திட்டத்தை பின்பற்றுவதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டமையும் உறுதிப்படுத்தப்படவில்லை. அவ்வாறே 2023 மார்ச் மாதம் 01 ஆம் திகதி அமைச்சு பெறுகை குழு கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டருந்த பிரகாரம் அதன் மிகுதி வேலைப் பகுதிகளை புதிய கம்பனிகளுக்கு கையளிக்கும் போது இணங்கப்பட்ட விலைகளுக்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு | இந்த நிர்மாணங்களுக்காக உள்நாட்டு நிதியம் வழங்கப்படாது இருந்தமைக்கான நிபந்தனையின் பிரகாரம் உலக வங்கி இணக்கப்பாட்டின் அடிப்படையில் நுவரெலியா வன ஆய்வு நிறுவனத்தில் மிகுதி நிர்மாணங்கள் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள மத்திய பொறியியல் உசாத்துணை பணியகம் மற்றும் அதனோடு இணைந்துள்ள நிர்மாண கம்பனியான மத்திய பொறியியல் சேவை கம்பனியின் மூலம் மேற்கொள்ளப்பட்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் நிலையியல் தொழில்நுட்பக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட விலை வீதத்தின் கீழ் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நேர் பெறுகை முறைமையை பின்பற்றுவதற்காக உலக வங்கி அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் இணங்கப்பட்ட விலைகளுக்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் நிலையியல் தொழில்நுட்பக் குழுவின் அங்கீகாரமும் பெறப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சின் நிலைய தொழிநுட்ப குழுவின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | ஆரம்பமாக மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 1,345 மில்லியன் ஆன வன ஆய்வு நிறுவனத்தின் நிர்மாண நடவடிக்கைகளின் ஆரம்ப ஒப்பந்தகாரரால் அளவிடல் பத்திரம் (BOQ) இன் பிரகாரம் 50 சதவீதத்துக்கு மேல் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கும்போது மிகுதி வேலை பகுதியை பூர்த்தி செய்வதற்காக ரூபா 793,534,305 மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் புதிய 02 கம்பனிகளுக்கு கையளிக்கபட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆரம்ப ஒப்பந்தகாரரால் கனிஸ்ட பதவி அணியினரின் உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் நிறுத்தப்படுகின்ற சந்தர்ப்பம் வரையில் மின்சார இணைப்பு வழங்குதல், குளியலறை மற்றும் மலசலகூட சுவர் நீர் கசிவை தடுப்பதற்காக வர்ண பூச்சுக்கள் இடல் (Water Proof) மற்றும் வெளியிலுள்ள சுவர்களில் வர்ணங்கள் பூசுதல் போன்ற செயற்பாடுகள் 60 சதவீதத்திற்கு மேல் பூர்த்தி செய்யப்பட்டிருக்கும் போது பூர்த்தி செய்யப்பட்ட வேலை பகுதியையும் உள்ளடக்கி அளவிடப் பத்திரம் தயாரித்து புதிய கம்பனிக்கு கையளித்தமையின் காரணமாக ரூபா 8,586,182 மேலதிக செலவினமொன்றை செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. | வன ஆய்வு நிறுவனத்தின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக இரட்டை கணிப்பீடு மேற்கொள்ள பட்டதா என்பதை பரீட்சிப்பதற்கு குழு ஒன்று நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வெளிநாட்டு உதவி செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இந்த நிறுவனங்களுக்கு உரிய மேலதிகமாக செலுத்தப்பட்ட செலவினங்களுக்காக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரை இனங்கண்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

(இ) அநுராதபுரம் மற்றும் குருணாகல் மாவட்டங்களின் கிராமங்கள் மற்றும் வயல்வெளிகளைச் சுற்றி மின்சார வேலி நிர்மாணிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் உரிய சங்கங்களுக்கும் மற்றும், அநுராதபுரம் மற்றும் குருணாகல் கமநல சேவை அபிவிருத்தி கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கும் பொருட்கள் விநியோகிக்கப்பட்ட பின்னர் ரூபா 80,740,804 உபகரணங்கள் மற்றும் எனஜெய்சர் வலுப்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 534,400 ஆன 12V (90Am) 16 பற்றரிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்படுத்தப்படாமல் ரிட்டிகல, மொறகொட மற்றும் மஹதிவுள்வெவ வன விலங்குகள் உப அலுவலக சூழலில் பாதுகாப்பின்றி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் செயற்திட்டத்தின் கால எல்லை முடிவடைந்த 2023 மே 31 ஆம் திகதி வரையிலும் அந்த 02 மாவட்டங்களில் நிர்மாணிக்கப்பட வேண்டிய 47 ஆன கிராமங்களை சுற்றி வேலிகளின் எண்ணிக்கையில் 07 ஆன குறைந்த அளவு மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 09 வேலைகளின் நிர்மாணங்களேனும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

மின்சார வேலி நிர்மாணிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களில் எஞ்சியவை மிகுதி வன பாதுகாப்பு திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்காக பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்டுள்ளது. நிதியமொன்றை ஸ்தாபிக்க முடியாதிருந்த சங்கங்களுக்கு யானை வேலி உபகரணங்கள் விநியோகிப்பதற்கு முடியாமைனால் இந்த உபகரணங்கள் எஞ்சி இருந்ததுடன், மீண்டும் இந்த செயற்பாடுகளை முறைமைப்படுத்துவதற்காக கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வேலி நிர்மாணித்தல், பராமரித்தல் அல்லது பின்தொடர் நடவடிக்கைகள் செய்தல் வன விலங்குகள் பாதுகாப்பு திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளபடாது இருந்தமைக்கு அந்த திணைக்களத்தால் கணக்காய்வுக்கு அறிவிக்கப்பட்டமையினால் இந்த உபகரணங்களை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்தி எதிர்பார்த்த முறையில் வேலி நிர்மாணித்து பராமரிப்பதற்காக அந்த திணைக்களத்துக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ரிட்டிகல வன சீவராசிகள் அலுவலகத்தில் தற்காலிகமாக நிர்மாணிக்கப்பட்ட பாதுகாப்பு கொட்டகையில் களஞ்சியப்படுத்தப்பட்ட மின்சார வேலியை நிர்மாணிப்பதற்காக பயன்படுத்தப் படுகின்ற பெறுமதி ரூபா 2,818,200 ஆன 154 கம்பி உருளைகள் மற்றும் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாத 122 nut & bolt கள்வர்களால் எடுத்துக் செல்லப்பட்டிருந்ததுடன் அந்த நட்டத்தைப் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரை இனங்கண்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரிட்டிகல வன சீவராசிகள் அலுவலகத்தில் தற்காலிகமாக நிர்மாணிக்கப்படுகின்ற பாதுகாப்பு கொட்டகையில் கள்வர்களால் எடுத்துச் செல்லப்பட்ட உபகரணங்கள் தொடர்பாக பரிசோதனை மேற்கொள்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | விசாரணை நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்து பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரை இனங்கண்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மின்சார வேலி நிர்மாணத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட 3183 Tension Spring அலகுகளில் 56 அலகுகள் மாத்திரம் மின்சார வேலிக்காக விநியோகிக்கப்பட்டமையால் ரூபா 7,817,500 பெறுமதியான 3127 அலகுகளும் ரூபா 1,408,500 பெறுமதியான மின்சார வேலி பாதிப்புக்கு உட்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது ஒலிக்கும் 09 Fence voltage alarm with siren and flashlight அலகுகளும் மொறகொட வனசீவராசிகள் அலுவலகத்தில் களஞ்சியத்தில் பயனற்றுக் காணப்பட்டது. | கிராமிய மின்சார வேலி மற்றும் வயல்களைச் சுற்றி வேலி அமைப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட Tension Spring இல் எஞ்சியிருந்த வனசீவகராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளது. | வெளிநாட்டு உதவி செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட இந்த உபகரணங்களை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துவதற்காக வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படல் வேண்டும். |

## 3.3 நட்டம் மற்றும் இழப்பு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் கெப் வண்டி ஒன்று 2023 ஒக்டோபர் 16 ஆந் திகதி பிரதான அலுவலகத்திற்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தின் போது சாரதி இல்லாமல் சுயமாக ஓடியதனால் ஏற்பட்ட விபத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட இழப்பு ரூபா 988,226 "பொருத்தமான பாதுகாப்பு நடவடிக்கை எடுக்காமை" காரணமாக ஏற்பட்டிருந்தமையால் இழப்பினை மீளளிப்புச் செய்ய முடியாதிருந்ததாக 2024 பெப்ரவரி 28 ஆம் திகதி தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த விபத்து தொடர்பாக விசாரணை நடவடிக்கைகளை பூர்த்தி செய்து பொறுப்புவாய்ந்தவரிடம் இருந்து நட்டத்தை அறவிடுவதற்கு 2024 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | மேற்கொள்ளப்பட்ட உள்ளக விசாரணைகளின் பிரகாரம் பொருத்தமான பாதுகாப்பு முறைமையும் பின்பற்றப்பட்டதாக இயந்திரப் பொறியியலாளர் பரிந்துரை செய்திருந்ததுடன் காப்புறுதிக் கம்பனிக்கு முறைபாடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அதற்கு காப்புறதிக் கம்பனி காண்பிக்கின்ற பதிலின் அடிப்படையில் பரிசோதனைகள் பூர்த்தி செய்து பொருத்தமான முறையில் இந்த விபத்திற்கான இழப்பை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | இந்த விபத்து தொடர்பாக பரிசோதனை நடவடிக்கைகள் விரைவாக பூர்த்தி செய்து பொறுப்புவாய்ந்த வரிடமிருந்து நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் 153 ஆன அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் 42 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் காணப்படாத 07 பல்நோக்கு உதவியாளர்களில் மிகை பதவியணியினரும் காணப்பட்டனர். வெற்றிடமான சிரேஷ்ட நிலையில் 18 பதவிகள், மூன்றாம் நிலையில் 02 பதவிகள், இரண்டாம் | சிரேஷ்ட நிலை, மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை வெற்றிடங்களை நிரப்புவதற்காக அரச நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்ப சேவையின் உத்தியோகத்தர்களைப் பெற்றுக்கொள்வதற்காக | செயலாற்றலுக்கு பாதகமாக தாக்கமளிக்கின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது தேவையான முறையில் பதவியணியினரைத் திருத்துவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| நிலையில் 17 பதவிகள் மற்றும் ஆரம்ப நிலையில் 05 பதவிகள் என்பன உள்ளடங்கி இருந்தது. | அமைச்சரவைக் குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |